## மேல் மாகாண சபை -2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மேல் மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்ரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2023 யூலை 11 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 21 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேல் மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதியற்ற சொத்தக்கள் மீதி ரூபா 17,837,594,303 ஆக இருந்த போதிலும் மேற்கூறிய பெறுமதியை 2022 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதியாகப் பதிவுசெய்யும் போது ரூபா 27,510,670,605 ஆக ரூபா 9,673,076,302 பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இதற்கு முன்னர் Excel Sheet மூலம் கணக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை நீக்கி சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்ட புதிய பெறுமதிகள் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட்டு முன்கொண்டுவரப்பட்டதன் காரணமாக வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | கடந்த ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் மீதியின் பெறுமதியானது நடைமுறை ஆண்டின் சனவரி 01 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் மீதியின் பெறுமதிக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா) மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை (மே. மா.) ஆகிய 02 நிறுவனங்களினூடாக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பொறியியல் பணியகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 528,985,774 பெறுமதி கொண்ட நிதியற்ற சொத்துக்களும் ரூபா 28,998,824 பெறுமதியான தகவல் தொழில் நுட்ப உபகரணங்களும் பொறியியல் பணியகத்தில் அல்லது மேற்கூறிய சொத்துக்களை மாற்றுவதன் மூலம் வழங்கிய நிறுவனங்களால் மீளாய்வாண்டின் இறுதி வரை முழுப் பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட்டது என்பதற்கு தெளிவான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அச்சொத்துக்கள் முறைப்படியாக ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டது என்பதற்கும் கணக்கீடு செய்யப்பட்டது என்பதற்குமான உறுதிப்படுத்தலை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருன்றது. | கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நிதியற்ற சொத்துக்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அமைச்சுக்கள் மற்றும் தீகைக்களங்களை உள்ளடக்கிய 14 நிறுவனங்களின் ரூபா 1,943,221,441 பெறுமதியான நிதியற்ற சொத்துக்கள் அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க மாகாண நிதியத்திலும் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திரண்ட நிதி அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் எதிர்பார்த்தவாறு நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்து முடிவுறுத்த முடியாதிருந்தது. | அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மாகாண வீதி அமைச்சின் 07 வாகனங்கள் ரூபா 41,350,000 தொகைக்கும் மாகாண கல்வித் திணைக்களத்தின் 40 வாகனங்கள் ரூபா 147,550,000 தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் வாகனங்களின் பெறுமதி முறையே ரூபா 28,400,562 மற்றும் 58,715,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டதனால் | 2023 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் சரியான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண வீதி அமைச்சின் நிதியற்ற சொத்துக்கள் ரூபா 12,949,438 குறைத்தும் மாகாண கல்வித் திணைக்களத்தின் நிதியற்ற சொத்துக்கள் ரூபா 88,835,000 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | உள்ளூராட்சி திணைக்களத்திலுள்ள மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கட்டுப்பாட்டுக் கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 62,634,791 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தம் ரூபா 56,679,725 ஆக இருந்ததனால் மீதிகளுக்கிடையே ரூபா 5,955,066 வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் இதனைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்கு மீதிகளை ஒப்பீடு செய்து சரியான மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நிதியத்தின் கணக்குகளுக்கு இணங்க மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக செலவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,814,283,986 ஆக இருந்த போதிலும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்த பெறுமதி ரூபா 270,672,300 ஆக இருந்ததனால் ரூபா 1,543,611,686 வித்தியாசம் காணப்பட்டது. | மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் உரிய கொள்வனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கு சமப்படுத்துவதற்கு சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நேரடி அறிக்கையை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை ஒப்பீடு செய்து சரியான மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | உள்ளூராட்சி அமைச்சின் மாகாண திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் 104-3-2-2104 செலவு விடயத்தின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்கான செலவு ரூபா 36,831,873 ஆக இருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் நிதியற்ற சொத்துக்கள் தொடர்ான கூற்றில் ரூபா 12,843,962 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 23,987,911 வித்தியாசம் காணப்பட்டது. | 2023 யூன் மாத கணக்குப் பொழிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளை ஒப்பீடு செய்து சரியான மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மாகாண பொறியியல் பணியகத்தின் பரீட்சை மீதிக்கும் ஒதுக்கீட்டு கணக்கிற்குமிடையே கட்டிட மீதியில் ரூபா 656,246 வித்தியாசமும் முடிவுறாத வேலைகளின் மீதியில் ரூபா 2,788,545 வித்தியாசமும் காணப்பட்டது. | உப அலுவலகங்களின் கணக்குப் பொழிப்பில் காணப்பட்ட பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கு மீதிகளை ஒப்பீடு செய்து சரியான மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 100 –ஆளுனர்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண ஆளுனர் அலுவலகத்தினை இராஜகிரிய ஜனஜயவில் அமைந்துள்ள கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்குரிய கொள்வனவுகளுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆளுனர் அலுவலகத்தினால் கோட்டே மாநகர சபைக்குச் செலுத்திய ரூபா 256,966,831 பணம் முறைப்படியாக கணக்கீடு செய்யப்படாது 2018 ஆம் | 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | அலுவலகத்தின் அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான ஒரு செலவாக மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சனாதிபதி செயலாளரின் PS/CSA/11-18 ஆம் இலக்க 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் பிரகாரம் கௌரவ ஆளுனரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற உச்ச அளவு உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 02 மற்றும் தேவைப்படுமாகவிருந்தால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு பாதுகாப்பு வாகனத்திற்கும் தகமை பெற்றிருந்த போதிலும் மேல் மாகாண ஆளுனர் அவர்களுக்கு பாதுகாப்பு வாகனத்தையும் உள்ளடக்கி 04 உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து (மே.மா) தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனம் விசேட விழாக்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டதுடன் மேலதிக எரிபொருள் வழங்கப்படுவதில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | எதுவித சுற்றறிக்கையினாலும் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்தும் 2019 ஆம் ஆண்டின் மே மாதத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ஆளுனர் உத்தியோகபூர்வ இல்லங்களைப் பன்படுத்திய ஆளுனர்கள் பயன்படுத்திய மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் அளவிற்கு இணங்க அவர்களினால் செலுத்த வேண்டிய ரூபா 1,206,653 மின்சாரப் பட்டியல் மற்றும் ரூபா 217,854 நீர்ப்பட்டியல்கள் ஆளுனர் அலுவலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டிலிருந்து அந்த உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்திய எந்த ஆளுனரிடமிருந்தும் நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்காக அறவீடு செய்தலானது இதற்கு முன்னரும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ இல்லத்தை பயன்படுத்துகின்ற ஆளுனர்களினால் மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2 தலைப்பு 101 –சபை செயலாளர் அலுவலகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விசாரித்து பார்ப்பதற்கும் அது சம்பந்தமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவதற்கும் பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் ‘‘நிதி மற்றும் செயலாற்றல் அறிக்கைகளை மீளாய்வு செய்யும் குழு” என்ற பெயரிலான ஒரு குழுவினை மாகாண ஆளுனரின் அங்கிகாரத்தின் அடிப்படையில் தோற்றுவித்து அக்குழுவிற்காக வழக்கமான கடமை நேரங்களிலேயே கூட்டம் கூட்டப்பட்டிருந்ததுடன் குழுவிற்காக 2021 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 2,802,678 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க மாகாண சபைகள் பிரதம செயலாளருக்கு விலாசமிடப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு படிக் கொடுப்பனவுகளையும் நிறுத்துதல் இடம்பெறவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய குழுவிற்காக 2023 ஏப்ரல் மாதமளவில் அப்படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டு வந்திருந்தன. | கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்தின் பிரகாரம் இப்படியினை செலுத்துதல் இடம்பெற்றுள்ளது. | படியினைச் செலுத்துவதற்காக தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பாராளுமன்றம் அல்லது அரசாங்கத்தின் ஒரு அமைச்சு அல்லது ஒரு நிறுவனத்தின் தலையீடின்றி அல்லது வேண்டுதலின்றி மேல் மாகாண சபைக்கு நேரடி தொடர்பற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருக்கு அவரின் தனிப்பட்ட வேண்டுதலினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 27,250,000 பெறுமதியான ஒரு ப்ராடோ ஜீப் மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் 2021 திசெம்பர் 07 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 29 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய காப்புறுதியான ரூபா 557,770 தொகை சபை செயலாளர் அலுவலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | ஆளனரின் கட்டளை மற்றும் அங்கீகாரத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டது. | மாகாண சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வாகனத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்கின்ற தரப்பினர்களால் வாகனத்திற்குரிய அனைத்து செலவுகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய ஜீஎஸ்/சீஎஸ்ஏ/11-8 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபை தலைவரின் அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்த்ப்பட்டு வருகின்ற உதவிப் பதவியணியினர் 10 நபர்களை மிகைக்காதிருக்க வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் அந்த பதவியணியினை 11 நபர்களாக அதிகரிக்கச் செய்து சம்பளமும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. மிகையாக ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒரு சாரதி பதவிக்காக 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை சம்பளமும் படிகளுமாக ரூபா 1,694,385 செலுத்தப்பட்டிருந்தது. | தலைவர் பதவிக்கு தகமையுள்ள பதவியணியினருக்கு மாத்திரம் சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றிக்கையின் பிரகாரம் மாகாண சபைத் தலைவருக்கு வீட்டு வாடகைப்படி செலுத்துவதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்தும் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 வீதம் மொத்தமாக ரூபா 1,650,000 வீட்டு வாடகைப் படியும் சுற்றிக்கையில் குறிப்பிடப்படாத உபசரிப்பு படியாக ஒரு மாத்திற்கு ரூபா 2,000 வீதம் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரை ரூபா 62,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | ஆளனரின் செயலாளரின் 3/6/2/1/15 (அலகு I) ஆம் இலக்க 2009 நவம்பர் 25 ஆந் திகதிய அங்கீகாரத்திற்கு இணங்க கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மேல் மாகாண சபையின் உத்தியோகபூவ காலம் 2019 ஏப்ரல் மாத்தில் முடிவடைந்ததன் பின்னர் சபை செயற்பாடற்றுக் காணப்பட்ட 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 வரையான காலப்பகுதியின் போது தலைவரின் பிரத்தியேக செயலாளருக்கு மேலதிக நேர வேலைப்படியாக மாதாந்தம் சம்பளத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட ரூபா 2,500 படிக்காக ரூபா 85,000 தொகையையும் உள்ளடக்கி ஏனைய பதவியணிக்கு மேலதிக நேர வேலைப்படியாக ரூபா 653,159 பிரயாணச் செலவுகளுக்காக ரூபா 689,220 தொகையாக மொத்தமாக ரூபா 1,427,379 செலுத்தப்பட்டது. | 2005 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 16/2005 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க இணைந்த மேலதிக நேர வேலைப்படியாக ரூபா 2,500 வீதம் செலுத்தப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக் குழுவின் சிபாரிசு மற்றும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மேல் மாகாண சபையின் சபைச் செயலாளர் அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் 2004 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2023 ஏப்ரல் மாதம் வரை உத்தியோகத்தர்களின் தொடக்க சம்பளத்தின் 1/3 மற்றும் ¼ பங்கு ஒரு படியாகச் செலுத்தப்பட்டு வருவதுடன் 2019 ஏப்ரல் 21 ஆ் திகதியோடு VI ஆவது மேல் மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்து புதிய ஒரு மாகாண சபை தெரிவுசெய்யப்பட்டிருக்காத நிலைமையின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு வேலை இல்லாதிருந்த போதிலும் 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை உத்தியோகத்தர்களின் தொடக்க சம்பளத்தில் ¼ பங்காகும் வகையில் செலுத்தப்பட்டிருந்த மொத்த படிகள் ரூபா 15,085,930 ஆகும். | 2023 மே மாதத்திலிருந்து சபை செயலாளர் அலுவலகத்திலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் ¼ படியினைச் செலுத்தலினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக படியினை செலுத்துவதற்காக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக் குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 102 –மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2007 மே 11 ஆந் திகதிய 2007/09 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியத்துடன் நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படுவதனால் மீண்டும் | 2023 சனவரி 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக துரித பதில் கிடைக்காததனால் 2023 மார்ச் 08 ஆந் திகதி மீண்டும் ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. | மிகையாகச் செலுத்திய வாழ்க்கைச் செலவுப் படியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாழ்க்கைச் செலவுப் படியினை செலுத்த முடியாது என்ற போதிலும் மாகாண சேவை ஆணைக்குழுவிலுள்ள 04 உத்தியோகத்தர்களுக்கு 2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018 சனவரி 31 ஆந் திகதி வரை ரூபா 813,404 வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்பட்டிருந்தது. 2023 மார்ச் மாதத்தின் போது அப்பணத்தில் ரூபா 15,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மின்சாரம் நீர் என்பவற்றினை உள்ளடக்கிய கட்டிட பராமரிப்புச் செலவாக ரூபா 24,590,288 மீளாய்வாண்டின் போது கோட்டே மாநகர சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மேல்மாகாண சபை அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கோட்டே மாநகர சபையுடன் மின்சாரம் , நீர் என்பவற்றினை உள்ளடக்கிய பராமரிப்புச் செலவுகள் சம்பந்தமாக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்காததுடன் கட்டணங்களை அறவீடு செய்வது சம்பந்தமாக முறையான ஒரு அடிப்படையினைக் குறிப்பிடாது சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்காக ஆணைக்குழு கொடுப்பனவு செய்திருந்தது. | துரிதமாக உடன்படிக்கை செய்துகொள்ளும் நடவடிக்கையை பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் கட்டிட பராமரிப்புச் செலவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 104 –உள்ளுராட்சி, பொருளாதார மேமம்பாடு, மின்சாரமும் வலுவும், சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கலும் வடிகாலமைப்பும், மற்றும் சுற்றுலா விவகார அமைச்சு(மே.மா)**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி அமைச்சின் வாகனங்கள் பல ஆண்டுகளாக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை மீண்டும் அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2019 மார்ச் மாதத்திலிருந்து நிதி குத்தகை முறைமைக்கு ஒரு வாகனத்தை பெற்றுக்கொண்டு மீளாய்வாண்டின் இறுதி வரை கடன் தவணைப் பணமும் வட்டியுமாக ரூபா 11,522,700 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் மீளாய்வண்டின் போது ரூபா 3,072,720 செலவு செய்யப்பட்டிருந்தது. | 2019 மார்ச் மாத்திலிருந்து அமைச்சின் பிரதான அமைச்சு பதவியணியினருக்காக ஒரு வாகனம் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டது. | 2019 ஏப்ரல் மாதம் மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் ஒரு மாதம் அல்லது குறுகிய காலத்திற்காக மாத்திரம் ஒரு வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஏப்ரல் 21 ஆந் திகதி மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடைந்திருந்தும் மற்றும் அமைச்சு அலுவகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வளவு ஏனைய தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்ற நிலையிலும் அமைச்சரவையின் சாதாரண நிருவாக மற்றும் நிறுவனரீதியான சேவைகளுக்காக உள்ளுராட்சி அமைச்சின் 104-3-01 ஆம் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மின்சாரம் மற்றும் நீர் செலவு விடயத்தின் கீழ் ரூபா 2,573,000 தொகையும் ஏனைய செலவு விடயத்தின் கீழ் ரூபா 5,144,000 ஆக மொத்தமாக ரூபா 7,717,000 செலவு செய்யப்பட்டிருந்தது. | ஆளுனர் அலுவலகத்தை தற்காலிகமாக 10 ஆம் மற்றும் 11 ஆம் மாடியில் ஸ்தாபிப்பதன் கரணமாக அதற்காக மின்சாரம் மற்றும் நீர் ாதுகாப்புச் சேவை என்பவற்றிற்காக மதிப்பீட்டினைத் தயாரிப்பது பிரதம செயலாளர் அலுவலகம் என்பதுடன் பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்படும். | ஒவ்வொரு நிறுவனத்திற்குமெனசெலவுகளை அந்த நிறுவனத்தின் செலவு விடயத்தின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்ழகை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சிறீ ஜயவர்த்தன புர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான ரூபா 7,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியான ஒரு கெப் வாகனம் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஆளுனரின் செயலாளரது தனிப்பட்ட வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த போது கீயால் முழுமையாக அழிவடைந்துள்ளது நி.பி 104(4) அறிக்கையின் பிரகாரம் வாகனத்திற்குப் பொறுப்பான சாரதியும் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் என நியமிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது தவறாகப் பயன்படுத்துவதற்கு இடமளித்தல் மூலம் அரசாங்கத்திற்கு மேற்கூறிய நட்டம் ஏற்படுவதற்கு அல்லது நட்டம் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தர் மாகாண அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தும் இன்னும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 104(4) அறிக்கை சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக மேல் மாகாண ஆளுனரின் செயலாளரால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 104 அறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4.1 மேல் மாகாணத்தின் சுற்றுலா சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண சுற்றுலா சபையினால் ரூபா 7,910,000 ணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஏத்துக்கால் கடற்கரை பூங்காவிற்குரிய | 2023 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிறுவனத்திற்குரிய வழக்கு சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழக்கு சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக குறுகிய வீடியோ நாடாவினை உருவாக்குவதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மேல்மாகாண உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து ரூபா 1,636,445 தொகை சபைக்கு கிடைத்திருந்ததுடன் 2023 ஏப்ரல் மாதம் வரை அந்த வீடியோ நாடா உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மாகாண சபை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு கிடைத்த இப்பணம் உரிய செயற்திட்டத்திற்கக ஈடுபடுத்தப்படாது 04 ஆண்டுகளாக குறைவாக பயன்படுத்தப்பட்டு வங்கி கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு கிடைத்த பணம் அந்த ஆண்டிலேயே எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துதல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு 105 – சுகாதார, சுதேச மருத்துவம், சமூகநலன்புரி, நன்னடத்தையும் சிறுவர் பாதுகாப்புச் சேவையும், மகளிர் விவகாரம் மற்றும் சபை நடவடிக்கைகள் அமைச்சு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| முன்னாள் மாகாண சுகாதார அமைச்சினால் பயன்படுத்திய ஜீப் வண்டி மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் கம்பஹா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினருக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த போது 2022 ஆம் ஆண்டில் அந்த வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் திருத்தம் செய்யும் செலவு ரூபா 19,153,714 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த விபத்தினால் ஏற்பட்ட நட்டத்திற்காக உரிய காப்புறுதிக் கம்பனி ரூபா 7,390,711 பணத்தை செலுத்துவதற்கு இணங்கி கொண்டிருந்ததுடன் மிகுதி ரூபா 11,763,003 பணம் அமைச்சினால் | இந்த வாகனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் மேல் மாகாண ஆளுனரின் மற்றும் மேல் மாகாண பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளை அறிவுறுத்தல் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. | மாகாண நிதி விதி 54.3 , 54.5 மற்றும் 54.6 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. மாகாண நிதி விதி 54.3.2 இற்கு இணங்க நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை நிர்ணயித்துக்கொள்வதற்காக அமைச்சினால் 2022 நவம்பர் 30 ஆந் திகதி விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் மாகாண நிதி விதி 54.6 இன் பிரகாரம் முழுமையான அறிக்கையினைச் சமர்ப்பித்து பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.6 தலைப்பு 107 – வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தியும் வர்த்தகமும், வீடமைப்பும் நிர்மாணமும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) மேல் மாகாண விவசாய அமைச்சினால் முன்னோடி செயற்திட்டமாக அமுல்ப்படுத்தப்பட்ட மரக்கறி மற்றும் பழவகைகளின் பெறுமதி சேர்த்த உற்பத்திப் பொருட்களை தயாரித்தல் செயற்திட்டம் மிகவும் வினைத்திறனான ஒரு தொழில் முயற்சியாக பேணப்படுகின்றது எனக்காட்டி எதுவித தொடர்புமற்ற போக்குவரத்து அமைச்சின் கீழ் காணப்படுகின்ற கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஆனால் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்கி வழங்கப்பட்ட 2022 எப்ரல் 22 ஆந் திகதிய 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளை | அரசாங்க செலவுகளைக் கட்டுப்படுத்தும் சுற்றிக்கையின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவது தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இச்செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் அதற்காக விசேட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்பற்றாது ரூபா 30,000,000 தொகையை புதிய செயற்திட்டம் மற்றும் புதிதாக மூலதனச் செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் வகையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஆளனரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பிவைத்தலும் செயற்திட்டத்தின் கீழ் புதிய நிர்மாணங்களுக்காக நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும் அடிப்படையில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்ப்புக்களை மீறி செயற்படுத்துவதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | | |
| (ஆ) | 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டிருந்தும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அல்லது ஏனைய மேல் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது மரக்கறி மற்றும் பழவகைகளை தயார்படுத்தும் செயற்திட்டத்திற்காக 19 நபர்களைக் கொண்ட பதவியணியினரைச் சேர்த்துக் கொண்டு அப்பதவியணிக்கு சம்பளமும் படிகளும் செலுத்துதல் மாகாண திறைசேரியினால் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக ரூபா 1,861,926 செலவு செய்யப்பட்டிருந்தது. | மாகாண திறைசேரியிடமிருந்து அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் அனைத்து செலவுகளையும் மேற்கொள்வதற்கு பயன்படுத்தலாம் என மற்றும் பிரதி பிரதான செயலாளரினால் (நிதி) வழங்கிய அறுவுறுத்தல்களுக்கு இணங்க அமைச்சு நடலவடிக்கை எடுத்துள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மரக்கறி மற்றும் பழவகைகளின் பெறுமதி சேர்த்த உற்பத்திப் பொருட்களைத் தயாரித்தல் செயற்திட்டம் மற்றும் மீன் இறால்களின் பெறுமதி சேர்த்த உற்பத்திப் பொருட்களைத் தயாரித்தல் செயற்திட்டம் ஆகிய 02 செயற்திட்டங்கள் மாகாண விவசாய அமைச்சினால் வீதி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஒவ்வொரு செயற்திட்ட இலக்கத்தின் கீழ் மொத்த மதிப்பீடு தயாரிக்கப்படாது மாகாண திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 170,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த நிதி ஏற்பாடு முழுவதும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணமாக விடுவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதிகாரசபையினால் அந்த பணத்தை செயற்திட்டத்தில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்தி வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | CSWP/FIN-AP/02/FI/10 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 14 அந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துகின்ற இடை நடுவில் நிறுவனத்திற்கு வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரே தடவையில் நிதி ஏற்பாடு முழுவதையும் விடுவிக்காது இருத்தல் வேண்டும். |
| (ஈ) | மீன் மற்றும் இறால்களின் பெறுமதி சேர்த்த உற்பத்திப் பொருட்களை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்குரிய ஒட்டுமொத்த மதிப்பீட்டில் மூலதனம் மற்றும் மீண்டுவரும் என்ற இரண்டு வகை செலவுகளும் உள்ளடங்கியிருந்தும் 109-03-2502-13 ஆம் இலக்க மூலதன செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை வழங்கியிருத்தல் சரியான | மாகாண திறைசேரியினால் தற்பொழுது அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 10 மில்லியன் செயற்திட்டத்தின் அனைத்து செலவுகளையும் மேற்கொள்வதற்காக பயன்படுத்தக்கூடியது என பிரதிப் பிரதம செயலாளரினால் (நிதி) வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மூலதனச் செலவு விடயங்களுக்கு கிடைத்த நிதி ஏற்பாட்டினை மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். |

நிலைமையில் இல்லாமை மற்றும் அமைச்சினூடாக அதிகாரசபைக்கு வழங்கிய ரூபா 10 மில்லியன் பணம் அனுப்புதல்களில் ரூபா 8,967,000 தொகை மீண்டுவரும் செலவுகளை உள்ளடக்கியிருந்தமையி னை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டிற்காக மூலதன செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணம் செலவு செய்யப்பட்டமையின் அடிப்படையில் செயற்திட்ட்ஙகளை கணக்கு வைத்தலானது குழப்பமான நிலையை உருவாக்கியிருந்தது.

### 1.5.6.1 மேல் மாகாணத்தின் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 19996 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 937/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகண சபையின் 1995 இன் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை கட்டளைகளுக்குரிய நிபந்தனைகளின் கீழ் “அனுமதிப்பத்திரம் செல்லுபடியாவது அதில் நிரந்தரமாக குறிப்பிடப்பட்டுள்ள பஸ்ஸிற்காக மற்றும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ள வீதிக்காக மாத்திரமாகும்” என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அனுமதிப்பத்தரம் வழங்கிய வீதியினைத் தவிர்த்து வேறு வீதிகளில் பயணம் செய்வதற்காக அதிகார சபையினால் விசேட பயண | போதியளவு எண்ணிக்கையான பஸ்கள் நாளாந்தம் ஓடாமை போன்ற சந்தர்ப்பங்களில் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற பஸ் பயணிகளின் தேதவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காகவும் நிரந்தர சேவைகளைப் பேணுவதற்கு போதியளவு வருமானம் கிடைக்காமையாலும் தற்காலிகமாக பஸ்கள் ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டது. | நியதிச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது எந்த அனுமதியும் பெற்றுக்கொள்ளாது ரூபா 1,717,590 தொகையை அறவிட முடியா கடனாக ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பதனை மீண்டும் ஏடுகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் செயற்படுத்தப்படுகின்ற மத்திய சாரதி பாடசாலை 2007 நவம்பர் 12 ஆந் திகதியிலிருந்து மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிசெய்து பயிலுனர் சாரதிப் பயிற்சியை வழங்குவதற்கான A தரத்திலான சாரதிப் பாடசாலையாக அனுமதிப்பத்திரத்தைப் பெற்று செயற்பட்டு வந்திருந்ததுடன் 2021 நவம்பர் 11 ஆந் திகதி அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் A தரத்திலுள்ள ஒரு சாரதிப்பாடசாலையாக செயற்படுவதற்காக மூன்று சாரதி ஆலோசகர்கள் இருக்கவேண்டிய போதிலும் 2022 ஒக்தோபர் மாதமளவில் மத்திய சாரதிப் பாடசாலையிடம் ஒரு ஆலோசகர் மாத்திரம் இருந்ததன் காரணமாக A தரத்தின் அல்லது B தரத்தின் சாரதிப் பாடசாலை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் C தரத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டி இருந்தது. அதற்கிணங்க | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் பயிற்சிப் பாடசாலை அனுமதிப்பத்திரத்தினை செல்லுபடியாக்குவதற்கு முடியாதிருந்ததனாது இந்த அதிகார சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயத்தினால் என தயவாகத் தெரிவிக்கிறேன். | மத்திய சாரதி பாடசாலையினை முறைப்படியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மத்திய சாரதிப் பாடசாலையின் நியம தரம் C வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் பார வாகனங்களை பயிற்றுவிக்கும் கற்கைநெறிகளையும் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அதிகாரசபையின் 224 கடைகளுக்கு மத்தியில் 42 கடைகள் 01 ஆண்டிலிருந்து 08 ஆண்டுகள் காலமாக குத்தகை அல்லது வாடகை உடன்படிக்கையின் கீழ் வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை குத்தகைதாரரினை தேடிக்கண்டு பிடிக்க முடியாதிருந்தது. எதிர்காலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குத்தகை அல்லது வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் கடைகளை வழங்கி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அதிபாரசபையின் 224 கடைகளில் 68 கடைகள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக குத்தகை உடன்படிக்கை இன்றியும் எதுவித பணமும் அறவிடப்படாதும் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கியிருந்ததுடன் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானங்களை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இச்சிக்கலினைத் தீர்ப்பதற்கு அதிக அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குத்தகை உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் அறவிட வேண்டிய கடை வாடகைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் இலங்கை பேக்குவரத்து சபைக்கும் மக்கள் மயப்படுத்திய போக்குவரத்து சபைக்கும் சொந்தமான 18 பஸ் தரிப்பிடங்கள் 1996 பெப்ரவரி 29 ஆந் திகதி மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒப்படைப்பு சான்றிதழின் மூலம் இதனை பௌதீகரீதியாக பயன்படுத்தும் உரிமை | இச்சிக்கலினை குறைக்கும் வகையில் உரிய தரிப்படங்களை பொறுப்பேற்கும் நடவக்கையை மேற்கொள்வேன். | பஸ் தரிப்பிடங்களின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரம் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை 26 ஆண்டுகள் கடந்திருந்தும் அதன் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (எ) | தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட கணனி முறைமையினைத் திட்டமிடல் மற்றும் ஸ்தாபிப்பதற்காக 2006 ஒக்தோபர் மாதத்திலிருந்து ஒரு ஆண்டு கால எல்லைக்காக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணக்கப்பாட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 850,000 பணம் கொழும்பு பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருளுக்காக ரூபா 1,404,916 ஆக மொத்தமாக ரூபா 2,254,916 செலவு செய்து முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டில் முறைமையில் ஏற்பட்ட குறைபாடுகளுடனான நிலைமையின் காரணமாக ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 13 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் எந்தப் பயன்பாட்டினையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மேலதிக நடவடிக்கை சம்பந்தமான சிபாரிசுடன் ஒரு அறிக்கையினை வழங்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | தகவல் தொழில்நுட்ப முறைமையினை ஸ்தாபிப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | வீதிப் பகயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வருமானத்தை உருவாக்கும் ஒரு பிரிவாக | தனியார் பயிற்சி பயிலுனர்களின் எண்ணிக்கை மட்டுப்பாடாக | மத்திய சாரதிப் பாடசாலையில் வருமானத்தை உருவாக்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டு வருகின்ற மத்திய சாரதிப்பாடசாலையில் பயிற்சிகளைப்பெற்றுக்கொள்கின்ற சாரதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக கடந்த 05 ஆண்டுகள் காலத்தில் தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது சாரதிப் பாடசாலையின் வருமானம் ரூபா 1,864,350 ஆக இருந்ததுடன் சம்பளமும், தேவனமும், படிகள், எரிபொருள் , வாகன பராமரிப்பு செலவகள் என்பவைகளை உள்ளடக்கி சாரதி பயிற்சி பாடசாலையின் அனைத்து செலவுகளும் மொத்தமாக ரூபா 5,148,575 ஆக இருந்ததனால் செயற்பாட்டு நட்டம் ரூபா 3,284,224 ஆகும். | உள்ளதனால் உழைக்கும் வருமானம் குறைவடைந்துள்ள போதிலும் ஊழியர் நிருவாகச் செலவுகள் முதலிய கண்டிப்பான செலவுகளினால் இந்த நட்டமான செயற்பாட்டு செயலாற்றல் காணப்பட்டது. | தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மத்திய சாரதி பாடசாலையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற மோட்டார் சைக்கள் பயிற்சி கற்கை நெறிக்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளில் பதிவுசெய்த மாணவர்கள் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்ற மாணவர்கள் தொடர்பான தரவுகளைப் பரீட்சித்த போது 2020 ஆம் ஆண்டில் 04 மாணவர்கள் மோட்டார் சைக்கள் பயிற்சியினைப் பெற்று அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2018, 2019, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளின் போது எந்த மாணவனும் மோட்டார் சைக்கிள் பயிற்சிக்காக பதிவுசெய்து கொண்டிருக்கவில்லை. | மோட்டார் சைக்கிள் பயிற்சிக்காக 2015 நவம்பர் 02 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிக்கு இணங்க சாரதி பாடசாலைக்கு கிளச் உடனான இனஜின் இயலளவு 100 குதிரை வலுவுக்கு அதிக மற்றும் குறைந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் சாரதிப் பாடசாலையில் இருந்ததனாது UA 8202 ஆம் இலக்க கிளச் உடனான இன்ஜின் இயலளவு 100 இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் மாத்திரமாகும். | பயிற்சி கற்கை நெறிகளைச் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 1834/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவுறுத்தல்களுக்கு இணங்க வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளை அதிகார சபையினால் பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது 2002 இன் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி நியதிச்சட்டத்திற்கு முரணாக இருந்ததன் காரணமாக உருவாகிய சட்ட சிக்கலின் அடிப்படையில் முச்சக்கர வண்டி சங்கங்களை பதிவு செய்வதிலிருந்து தவிர்த்து இருந்ததனால் 2020 ஆம் ஆண்டின் போது முச்சக்கர வண்டிகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. சட்டரீதியாக செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளாது அதிகார சபை முச்சக்கர வண்டிகளைப் பதிவுசெய்தலினை ஆரம்பித்திருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கு புதிய சட்டங்களை விதித்து முச்சக்கர வண்டிகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த சட்டவிதி அமுல்ப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முச்சக்கர வண்டிகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக காணப்பட்ட சட்டரீதியான சிக்கல் திருத்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டு புதிய சட்டவிதியினை தயாரித்தல் முதலிய நடவடிக்கை இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியான சிக்லினைத் தீர்த்து முச்சக்கர வண்டிகள் பணியகத்தை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 1992 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மாகாண சபை வீதிப் பயணிகள் சேவை நியதிச்சட்டத்தின் கீழ் 2007 மார்ச் 16 ஆந் திகதிய | அனுமதிப்பத்திர பணிப்புரைகயையும் நிபந்தனைகளையும் மீறுகின்ற விசேட சந்தர்ப்பங்களின் போது தவிர அதிகார சபையின் நடைமுறைப் பாவனையில் | நியதிச் சட்டத்திற்கும் நடைமுறைகளுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1488/32 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிட்ட 3.1 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் வெற்றிடங்களைப் பூர்ணப்படுத்துவதற்காக ஓட்டுனர்களைத் தெரிவுசெய்யும் போது மேல் மாகாணத்தில் செயற்படுகின்ற பயணிகள் போக்குவரத்திற்காக பஸ் ஓடக்கூடிய வீதிகளில் காணப்படுகின்ற அல்லது உருவாகும் வெற்றிடங்களின் தேவைப்பாட்டிற்காக பஸ்களை ஈடுபடுத்தும் வகையில் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதானது கேள்வி முறைமையின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பஸ்ஸிற்கு சொந்தமான ஓட்டுனர்களுக்கு மாத்திரமாகக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக அதிகார சபையினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சாதாரண சேவை, அதிசொகுசு சேவை, அதிவேக சேவை என்பவற்றின் கீழ் 6,161 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 5,064 அனுமதிப்பத்திரங்கள் அல்லது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையில் 82 சதவீதமானவை முறையான கேள்வி நடைமுறையினை பின்பற்றாது வழங்கப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திரங்களை செல்லுபயற்றதாக்காது அந்த அனுமதிப்பத்திரங்கள் வருடாந்தம் நீடிப்புச் செய்து இன்றுவரை பேணப்பட்டுள்ளது. | |
| (ஔ) | 1992 இன் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தின் 13(2) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமும் | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் போது ஆயுள் காலத்திற்கும் ஒரு முறை வழங்குதல் என்ற அடிப்படையில் மாற்றம் செய்து 03 ஆண்டுகள் | நியதிச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அது ஏற்கனவே அனுமதிப்பத்திரமும் ஏற்கனவே செல்லுபடியற்றதாக்கப்பட்டிருக்குமாகவிருந்தாலே தவிர்க வழங்கப்படுகின்ற திகதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் தொடக்கம் முப்பத்து ஆறு மாத காலத்திற்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகார சபையினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சாதாரண சேவை, அதிசெகுசு சேவை, அதிவேக சேவை என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட 6161 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கேள்வி மூலம் வழங்கப்பட்ட 110 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் அவ்வாறு 03 ஆண்டுகள் காலப்பகுதிக்கு உட்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் 6,051பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களானது ஆயுள் காலத்திற்கும் ஒருமுறை (Life Time) என்ற அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. | காலப்பகுதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக 2022 யூலை மாத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்கிணங்க அந்த கேள்வி நிபந்தனையின் கீழ் 2023 பெப்ரவரி மாதம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு கேள்வி கோரல் இடம்பெற்றது. | |
| (க) | 133 வீதிகளுக்குரிய 415 அனுமதிப்பத்திர வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2022 யூலை மாதம் கேள்வி கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த 415 வெற்றிடங்களுக்கு மத்தியில் 56 வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்பட்டிருந்ததுடன் 359 வெற்றிடங்கள் அல்லது 87 சதவீதமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. 359 | முதலீட்டாளர்கள் பயணிகள் போக்குவரத்து துறையில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் இன்மையின் அடிப்படையில் சாதாரண முழு வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 80 சதவீதம் அளவானவற்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் இயலுமை காணப்படவில்லை. | வெற்றிடங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கரைள நிரப்புவதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் கிராமிய வீதிகளில் பயணிகள் சேவை நடவடிக்கைகள் பலவீனமடையும் நிலைமை உருவாகியிருந்தது. | | |
| (கா) | 2021 ஆம் ஆண்டில் சில பஸ் வீதிகளுக்கு பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்கு கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட பஸ் ஓட்டுனர்கள் பயனிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்கியதன் பின்னர் உரிய கேள்வி நிபந்தனை இலக்கம் 5.1 இன் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் கடிதத்தினை அனுப்பிய திகதியிலிருந்து 60 நட்களுக்குள் பஸ்களை போக்குவரத்துச் சேவைக்கு இணைத்து போக்குவரத்து சேவையினை ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் மொத்தமாக ரூபா 14,020,450 தொகையான முழுப்பணமும் செலுத்திய 18 பஸ் ஓட்டுனர்களுக்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்கி 01 ஆண்டு 08 மாதங்கள் கடந்திருந்தும் உரிய பஸ்கள் ஓடுவதற்கு இணைத்துக்கொள்ளப்பட வில்லை. இதற்கிணங்க பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் தொடக்க குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. | மேல் மாகாணத்திலுள்ள பயணிகளின் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய், பொருளாதார பிரச்சினை, பொது போக்குவரத்தின் வருமான வாய்ப்பு கீழ் மட்டத்தில் காணப்படுகின்றதனால் முதலீட்டு பிரதிபலன் குறைவடைதல் ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல் குறைந்த மட்டத்திற்கு வந்திருந்தது. | பஸ்களை ஓடுவதற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | கேள்வி நிபந்தனைகள் தொகுப்பின் 21.6 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விதாரர் எவரும் ஒரு வீதிக்கு அல்லது சில | கேள்வி அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் தொகுப்பின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து பணமும் | கேள்வி நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீதிகளுக்காக தெரிவுசெய்யப்படுகின்ற உயர்நத விலையினை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் உரிய வீதிக்காக ஒரு பஸ்ஸினை ஈடுபடுத்துவதற்கு முடியாது போகுமாயின் அவரினால் செலுத்தப்பட்ட கேள்விப் பிணைப் பணம் அதிகாரசபைக்கு பெறுப்பேற்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கேள்வியின் உயர்ந்த கேள்வி மனுவைச் சமர்ப்பித்து பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்கியிருந்தும் பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டு போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 2021 ஆம் ஆண்டில் கேள்வி மனுவினைச் சமர்ப்பித்த 13 பஸ் ஓட்டுனர்களின் ரூபா 940,000 பிணைப்பணமும் 2022 ஆம் ஆண்டில் 03 பஸ் ஓட்டுனர்களின் ரூபா 300,000 பிணைப் பணத்தினையும் விடுவிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது. | செலுத்தப்பட்டதனால் இப்பிணை வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பஸ்களை ஈடுபடுத்துவதற்கு தாமதம் ஏற்படுமாகவிருந்தால் நிபந்தனை தொகுப்பின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்பதனால் அப்பிணைப் பணத்தை விடுவிக்கும் போது பஸ்களை ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| (கீ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக கிடைக்க வேண்டிய கேள்வி பிணை வைப்பு வருமானமாகிய ரூபா 42,766,741 தொகையை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | கேள்வி நிபந்தனைகளைப் பூரணப்படுத்தாததன் காரணமாக வழங்கிய சில அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. | பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (கு) | அதிகார சபையின் மத்திய பயிற்சிப் பாடசாலையில் பாரமான வாகனங்கள் பயிற்சி கற்கை நெறிகளின் | மத்திய பயிற்சிப் பாடசாலையின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட பஸ் | பஸ்ஸினை வினைத்திறனான செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்றுவிக்கும் பஸ் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 3,171,350 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் இந்த பஸ் தற்பொழுது 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் பயிற்றுவிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளாது ஹோமாகம பஸ் நிறுத்தும் தளத்தில் பாதுகாப்பின்றி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | சலுகைக் கட்டணத்தின் கீழ் வாடகைக்கு வழங்குவதற்காக 2022 மார்ச் மாதம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றிருந்தும் எரிபொருள் சிக்கல் மற்றும் பொருளாதார வீழ்ச்சி நிலைமையின் காரணமாக இன்றுவரை இமுல்ப்படுத்துவதற்கு முடியாது காணப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) | மேல் மாகாணத்தில் ஓடுகின்ற தனியார் பஸ்களின் ஓடுதல் நடவடிக்கையினை முறைப்படுத்தும் குறிக்கோளில் 16 வீதிகளில் பஸ்களை ஓடுவதில் ஈடுபடுத்தும் போது எடுக்கும் நேரத்தை நேரப் பதிவு செய்வதற்கும் அதன்மூலம் பஸ்கள் ஓடுகின்ற காலத்தை முகாமைத்துவம் செய்வதற்காக 40 நேரத்தை பதிவு செய்யும் இயந்திரங்களும் அவை தொடர்பான மென்பொருட்களும் 2018 நவம்பர் 23 ஆந் திகதி ரூபா 3,013,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த நேரத்தை பதிவுசெய்யும் 40 இயந்திரங்கள் 07 பிராந்திய அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் அவற்றில் 04 நேரத்தை பதிவு செய்யும் இயந்திரங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதுடன் 36 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாது பிராந்திய அலுவலகங்களில் விளைவற்றுக் காணப்பட்டது. | 16 வீதிகளின் நேரத்தைப் பதிவு செய்யும் 40 இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு பஸ்கள் ஓடுதலானது 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2020 மார்ச் 26 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. எனினும் 2020 மார்ச் மாதம் இறுதி வாரத்தில் கொவிட் தொற்றுநொயினால் தனிமைப்படுத்துதல் ஊரடங்குச் சட்டம் மற்றும் பயண மட்டுப்பாடுகளின் காரணமாக பஸ்கள் ஓடாமை மற்றும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக விருந்தோம்பல் நிலையங்களை மூடவேண்டி ஏற்பட்டிருந்தது. | நேரத்தைப் பதிவுசெய்யும் இயந்திரங்களையும் மென்பொருட்களையும் பயன்பாட்டிற்கு எடுத்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கெ) | 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,280,000 செலவு செய்து குணசிங்ஹபுர பஸ் | இந்த சூரிய மின்வலு முறைமையை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு | சூரிய மின்வலு முறைமையை நல்ல நிலைக்கு மாற்றுதல் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்துமிடத்தில் பொருத்தப்பட்டிருந்த சூரியமின்வலு முறைமையானது 2021 பெப்ரவரி மாதத்திலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் இந்த சூரிய மின்வலு முறைமையை மீண்டும் நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதற்கு 2023 ஏப்ரல் மாதம் வரையும் முடியாதிருந்தது. மேலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான மீளாய்வு அறிக்கையிலும் இந்த முறைமை பௌதீக ரீதியாக காணப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருவதற்காக சூரிய மின்வலு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இன்றுவரை உரிய நிறுவனத்திடமிருந்து பதில் கிடைக்கவில்லை. | வேண்டும். |
| (கே) | ரூபா 595,000 கிரயத்திற்கு 2002 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்த மின்பிறப்பாக்கி இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தலைமை அலுவலகத்தில் காணப்பட்டதுடன் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது தேவைப்பாடு காணப்படுகின்ற பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை ல. | 2002 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூபா 595,000 பெறுமதிக்கு கொள்வனவு செய்த மின்பிறப்பாக்கி இயந்திரம் சில ஆண்டுகளாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கொ) | மேல் மாகாணத்தில் பதிவுசெய்துள்ள முச்சக்கர வண்டிகளை அதிகாரசபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற முச்சக்கர வண்டி பணியத்தில் பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,750,000 பெறுமதியான 50000 அடையாள அட்டை கவர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் | முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாமையினால் அக்கவர்கள் அதிகார சபையின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்படுகின்றன. | தேவைப்பாட்டினை கவனத்தில் கொண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதுவித பயன்பாடும் இன்றி 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக அதிகாரசபையின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | | |
| (கோ) | 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கைக்கு இணங்க கொழும்பு 04 பிராந்திய அலுவலகத்தின் அதிகாரப் பிரதேசத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ரூபா 2,778,225 பெறுமதியான 17 நேரப் பதிவுப் பெட்டிகளின் பற்றாக்குறை காணப்பட்டது. . | நேரப்பதிவு பெட்டிகளின் பௌதீக மதிப்பீட்டினை மேற்கொண்டு இடம்பெற்றுள்ள பிழைகளை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | பற்றாக்குறை சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கை) | அதிகார சபையின் 05 பிராந்திய அலுவலகங்களின் அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ரூபா 1,988,656 கிரயமான 15 பயணிகள் கூடாரங்கள் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக காணாமல் போயிருந்தன. பயணிகள் கூடாரங்கள் காணாமல் போனமை தொடர்பாக மாகாண நிதி விதி 52 இலிருந்து 62 வரை வலியுறுத்தப்பட்டுள்ளவாறு மீளாய்வண்டின் இ.றுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயணிகள் கூடாரங்கள் காணாமல் போனமை தொடர்பாக பிராந்திய அலுவலகங்களின் முகாமையாளர்களிடமிருந்து தகவல்களைப் பெற்று அதற்கிணங்க நட்டங்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து இடம்பெற்றுள்ள நட்டத்தை தீர்த்துவைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகிறேன். | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கௌ) | பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவி 2016 ஏப்ரல் 25 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2017 பெப்ரவரி 22 ஆந் திகதியிலிருந்து இப்பதவியில் பதில் கடமை பார்ப்பதற்காக கொழும்பு 03 பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தர் தாபன விதிக் கோவையின் | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையற்ற மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செய்யப்பட்ட கொடுப்பனவை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 12.5.4 ஆம் பிரிவின் பிரகாரம் தமது நிரந்தரப் பதவியின் முழுமையான ஊதிபத்தியினையும் பதில் கடமை பதவியின் தொடக்க சம்பளத்தின் 25 சதவீத பதில் கடமை படியாகவும் பெற்றுக்கொண்டிருந்தார். அதற்கிணங்க பதில் கடமை படியாக 2017 பெப்பரவரி 22 ஆந் திகதியிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 ஆண்டுகள் 10 மாதங்களுக்காக ரூபா 1,429,225 தொகை படியாக பெற்றுக்கொண்டிருந்தும் அந்த உத்தியோகத்தரின் நிரந்தர பதவியான பிராந்திய முகாமையாளர் பதவியின் கடமைகளை மேற்கொண்டிருக்கவில்லை. எனவும் முழு நேரமும் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவியில் மாத்திரம் சேவையாற்றியுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே அவரின் நிரந்தர பதவிக்காக ஏனைய உத்தியோகத்தர் கடமையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார் எனவும் இந்த உத்தியோகத்தருக்கு பதில் கடமை சம்பளமாக செலுத்தப்பட்ட ரூபா 1,429,225 தொகை முறையற்றதும் சட்டத்திற்கு முரணானதுமான கொடுப்பனவாகும். | | |
| (ச) | பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம்) தவி 2016 யூலை 01 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2017 பெப்ரவரி 22 ஆந் | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையற்ற மற்றும் சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து கொழும்பு 04 பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் பிராந்திய முகாமையாளர் இப்பதவியில் பதில் கடமை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தர் தாபன விதிக் கோவையின் 12.5.4 ஆம் பிரிவின் பிரகாரம் தனது நிரந்தர பதவியில் முழுமையான ஊதிபத்தினையும் பதில் கடமை பார்க்கும் பதவியின் தொடக்க சம்பளத்தில் 25 சதவீத பதில் கடமை பார்க்கும் படியாக 2017 பெப்ரவரி 22 ஆந் திகதியிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 05 ஆண்டுகள் 10 மாதங்களுக்காக ரூபா 1,429,225 படியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அதவியில் கடமை மேற்கொண்டிருக்கவில்லை எனவும் முழு நேரமும் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம்) பதவியில் மாத்திரம் சேவையாற்றி இருந்ததுடன் இந்த உத்தியோகத்தருக்கு பதில் கடமை சம்பளமாக செலுத்தப்பட்ட ரூபா 1,429,225 தொகை முறையற்ற மற்றம் சட்டத்திற்கு முரணான கொடுப்னவாகும். | | |
| (சா) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2020 | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் 16 ஆந் திகதியிலிருந்து அதிகாரசபையின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை . | | |
| (சி) | வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிகழ்கால மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,500,000 தொகையான ஒரு கெப் வாகனம் 2021 மே 09 ஆந் திகதி நாட்டில் காணப்பட்ட சச்சரவான சூழ்நிலையின் கீழ் ஆர்ப்பாட்டக்காரர்களால் மொரட்டுவை பிரதேசத்தில் தீ வைக்கப்பட்டிருந்ததுடன் அத்தீயினால் கெப் வாகனம் முழுமையாக அழிவடைந்திருந்தது. தலைவரினால் கணக்காய்வின் போது வழங்கிய கூற்றிற்கு இணங்க கெப் வாகனம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது உத்தியோகபூர்வ வாகனத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட சாரதி இன்றி வெளிநபரினால் கெப் வாகனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் உத்தியோகபூர்வ பயணம் இல்லாது அரசியல் கலந்துரையாடல்/ கூட்டத்திற்காக பங்குபற்றி திரும்பி வரும் போது வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

என்பது வெளிப்படுத்தப்பட்டது.

**1.5.6.2 வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண நிதி விதி 51, 52.1, 54, 55, 76.1.8 மற்றும் 106 இற்கு இணங்க காலங்கடந்த பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்காகவும் பணம் அறவீடு செய்யாது வாடகைக்கு இயந்திரங்களை வழங்குவது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்காகவும் அவ்வாறே இன்னும் கடன் அடிப்படையில் சேவையை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைக் கோவைகளை நிரந்தரமாக ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலமாக அஸ்கிரிய மொரகஹவத்த இரத்மலானை ஆகிய பிராந்திய அலுவலகங்களின் மூலம் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் திருத்தம் செய்வதற்காக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 14,865,587 மீதியினை அறவீடு செய்வது சம்பந்தமாக மீளாய்வாண்டின் இறுதி வரையும் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிவிதியின் பிரகாரம் கணக்குகளிலிருந்து பதிவழித்தல் பணிப்பாளர் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டள்ளது. | மாகாண நிதி விதி பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அம்பாறை மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க | நிதிவிதியின் பிரகாரம மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | மாகாண நிதி விதி பின்பற்றப்படுதல் வேண்டும். |

வேண்டிய ரூபா 143,122,503 தொகையில் ரூபா 24,518,490 தொகையான சான்றுபடுத்திய விலைப்பட்டியல்களின் பெறுமதியை கழித்து பெறவேண்டிய மீதிக்கு செம்மையாக்கப்பட்டதுடன் கழித்த அப்பெறுமதி செயற்திட்டத்தின் பொது செலவு கணக்கிற்கு பின்னர் செம்மையாக்கப்பட்ருந்தது. எவ்வாறாயினும் ரூபா 24.52 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்ட விலைப்பட்டியலின் பெறுமதியை கழிப்பதற்கு உறுதியான காரதணத்தை குறிப்பிட்டு அதற்காக மாகாண நிதி விதி 62.3.2 இன் பிரகாரம் மாகாண திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்களை கைவிடும் போது கவனயீனம் அல்லது தவறு அல்லது மோசடி இடம்பெற்றிருக்கவில்லை என முறையான பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | மொறட்டுவை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் விஜேராம வீதி மற்றும் தலபத்பிடிய கனத்த வீதியினை நிர்மாணிக்கும் போது மேற்கூறிய இரண்டு வீதிகளின் எஸ்போல்ட் பரப்புதல் தொடர்பான தளபரீட்சிப்பிற்கு இணங்க பரப்பப்பட்டுள்ள எஸ்போல்ட்டின் அளவு 283.56 தொன்களும் பரப்பியுள்ள எஸ்போர்டின் கனம் 35 mm இனைவிட குறைவாக உள்ள சந்தர்ப்பங்களில் | அவ்வாறான நடவக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறாமலிருப்பதற்கு இந்த ஆண்டிலிருந்து கடைசி விலைப்பட்டியலினை 75 சதவீதம் வரை மாத்திரம் செலுத்துவதற்கும் உள்ளக கணக்காய்வாளரின் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 95 சதவீதம் கொடுப்பனவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. | உடன்படிக்கைகள் மற்றும் செய்த வேலைகளின் அளவிற்கு இணங்க கொடுப்பனவு செய்யவேண்டியதுடன் மிகைக் கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்ய முடியாத போதிலும் அந்த அளவினைவிட குறைவாக இருந்த 08 வீதிகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட எஸ்போல்ட்டின் அளவு 37.13 தொன்களும் ஆக 320.6 தொன் எஸ்போல்ட்களுக்காக மிகையாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,847,678 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. விலைப்பட்டியல்களின் பெறுமதியில் 95 சதவீதம் உப விலைப்பட்டியல்களின் மூலம் செலுத்தப்பட்டுள்ளதனால் இறுதி விலைப்பட்டியல்களின் மூலம் இந்த மிகையாகச் செலுத்தியுள்ள பெறுமதியை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஈ) | அதிகாரசபையினால் 2022 ஆம் ஆண்டின் போது வீதி சமிக்ஞை பலவகைகளை நிர்மாணிப்பதற்காக தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலைமனு கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சமிக்ஞை பலகைகளைப் பொருத்துவதற்குத் தேவையான பொருட்களுக்கு மத்தியில் GI Sheet மற்றும் GI Pipe களுக்கான விலைகளை ஒப்பீடு செய்த போது அதிகார சபை அதிக விலையை செலுத்தியிருந்ததனால் அந்த இரண்டு விடயங்களுக்காக மாத்திரம் ரூபா 9,395,730 மிகையாக பணம் செலுத்தப்பட்டிருந்தது என்பது | அரசாங்க நிறுவனமான STC நிறுவனத்திடமிருந்து அக்காலப்பகுதியில் காணப்பட்ட விலைகளுக்கு இணங்க அந்த மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் மிகையாக பணம் செலுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகாரச் சபையிடமிருந்தும் அரசாங்கத்துடன் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களின் மூலமும் 1990 ஆம் ஆண்டிலிருந்து அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வேறு இடங்களில் அமைந்துள்ள தொடக்க ஒப்படைப்பு பெறுமதி இல்லாத 1,109.15 பேச்சர்ஸ் அளவான 14 காணிகள் அதிகார சபையினால் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு மற்றும் அதிகாரசபைக்கு பயன்பாடு இல்லாத காணிகளை மீண்டும் ஒப்படைத்த நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றில் அதிகாரமற்ற குடியிருப்பாளர்கள் பயன்படுத்திவந்த 1,173.1 பேச்சர்ஸ் அளவான 12 காணிகள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் இறுதிவரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்றுவரை பொறுப்பேற்கப்பட வேண்டியுள்ள காணி சார்ந்த நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவகங்களின் உத்தியோகத்தர்களால் பிரதேச செயலகங்களின் காணி உத்தியோகத்தர்களைச் சந்தித்து காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காணிகளின் உரிமையை தீர்த்து வைத்து பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்தும் அரசாங்கத்துடன் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களின் மூலமும் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 4,715.23 பேச்சர்ஸ் அளவான 32 காணிகளுக்கு ஒப்படைப்பு சான்றிதழ் அல்லது உறுதி அதிகார சபையிடம் இருக்கவில்லை | இன்றுவரை பொறுப்பேற்க்கப்பட வேண்டியுள்ள காணிகளின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களின் உத்தியோகத்தர்களால் பிரதேச செயலாளர்களின் காணி உத்தியோகத்தர்களைச் சந்தித்து காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காணிகளின் உரிமையை தீர்த்து வைத்து பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நாட்டை உருவாக்கும் சௌபாக்கிய துூரநோக்கின் கீழ் தேசிய | இதில் குறிப்பிடப்பட்ட பூர்த்தி செய்யப்படாத 04 வீதி வேலைகள் உள்ளது | திட்டமிட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | பிராந்திய மற்றும் கிராமிய ரீதியாக 100,000 கிலோ மீற்றர் நீளமான மாற்று வீதிகளை புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020/2022 ஆண்டுகளின் போது 191.68 கிலோ மீற்றர்களை மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டு ரூபா 3,735,709,225 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் 160 கிலோ மீற்றர் வீதி மாத்திரம் புனரமைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் நிதிப் பெறுமதி ரூபா 2,158,198,309 ஆகும். மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 104 வீதிகளைப் புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் பௌதீக செயல்முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது 100 சதவீதம் பூர்த்திசெய்யப்படாத 04 செயற்திட்டங்கள் காணப்பட்டன. | என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் நிறைவேற்றப்படுகின்ற வேலைகளுக்காக மாத்திரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. நாட்டில் காணப்படுகின்ற தீவிர நிதிப் பிரச்சினையால் 2022 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை நிறுத்துவதற்கு எங்களுக்கு அறிவித்தமை இதற்கு காரணமான வலியுறுத்துகிறேன். | வேலைகளை ஆரம்பிப்பதற்கும் முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2020 , 2021 மற்றும் 2022 ஆண்டுகள் தொடர்பாக 100,000 கிலோமீற்றர் நிகழ்ச்சித்திட்டம் , மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம், மற்றும் மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் 196 வீதிகளை வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,297,864,042 பெறுமதியான நிர்மாணச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 19 வீதிகளின் ரூபா 176,863,743 | நாட்டில் காணப்பட்ட தீவிர நிதிப் பிரச்சினையால் இவ்வாறான செயற்திட்டங்களை நிறுத்துவதற்கு எங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மனித மற்றும் பௌதீக வளங்களை திறனாகவும் பயனுறுதியாகவும் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான வேலைகள் மாத்திரம் நேரடியாக வேலையாள் அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மிகுதி அனைத்து வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஒப்பந்த அடிப்படையில் வெளி ஒப்பந்தக்காரர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் அதிகாரசபையின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 814 பதவியணியினர்கள் இருந்தும் மற்றும் நிர்மாணத்திற்குத் தேவையான அனைத்து வகையான இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் இருந்தும் நேரடியாக வேலையாள் அடிப்படையின் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டஙட்களின் அளவு 14 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (ஐ) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அபிவிருத்தி செய்யப்பட்ட கொட்டாவ தகவல கட்டம் 01 மற்றும் 02 பிலியந்தல பைபாஸ் கட்டம் 02 செயற்திட்டங்களை முடிவுறுத்தி பல ஆண்டுகள் கடந்திருந்தும் செய்த வேலைப் பெறுமதியாக சமர்பிக்கப்பட்ட ரூபா 305,987,602 இறுதி விலைப் பட்டியல்கள் தொடர்பாக நிறைவேற்றுப் பொறியிலாளரால் இன்றுவரை அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | இச்செயற்திட்டத்திற்காக Standing Teachnical Committee (STC) விலைகளுக்காக சமர்ப்பித்திருந்ததுடன் அந்த விலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தானது சந்தை விலைகளைவிட குறைவாகும். அதற்காக எங்கள் அதிகார சபையினால் 2019/2021/ 2023 ஆண்டுகளின் போது வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அது பலனளித்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இறுதிக்கட்டத்தில் மேன்முறையீட்டினை கவனத்தில் கொண்டு துரிதமாக எங்களுக்கு தெரியப்படுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகார | HSR இற்கு இணங்க மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சபையினால் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஓ) | மொரகஹஹேன இயந்திரப் பொறியியல் நிலையத்தில் இயந்திரங்களையும் வாகனங்களையும் திருத்தம் செய்வதற்காக இரும்புகளைப் பயன்படுத்தி ஒரு வேலைத்தளம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 15,906,290 செலவில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த வேலைத்தளத்திற்கு மத்தியில் இரண்டு மாடி அலுவலகமும் ஒரு களஞ்சிய கட்டிடமும் மீளாய்வாண்டின் பேது நிர்மாணித்ததன் காரணமாக வேலைத்தளத்தில் இடவசதிகள் நெருக்கடியாக இருந்தது. அதன் காரணமாக வேலைத்தளத்தினை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக முழுமையாக பயன்படுத்த முடியாதிருந்ததுடன் இயந்திரங்களையும் வாகனங்களையும் திறந்த வெளியில் நிறுத்திவைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. ரூபா 20,603,152 மதிப்பீட்டு பெறுமதியான இக்கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 13,211,727 செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வேலைத்தளத்திகுள் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி அலுவலகம் மற்றும் களஞ்சிய கட்டிடத்தின் தளமாடியின் உயரம் 08 அடி என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டதனால் அக்கட்டிடமும் அலுவலக மற்றும் களஞ்சிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நிலையத்தில் போதியளவு இடவசதி | இவ்வாறான நிலைமை மீண்டும் உருவாகாமல் இருப்பதற்கான ஆலோசனையுடன் ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | மிகவும் வினைத்திறனாகவும் பொருளாதார ரீதியாக பிரதிபலன்கள் கிடைக்கும் வகையிலும் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கவனயீனமாக செயற்பட்டதனால் ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டிருந்தும் அவற்றினை வாகன வேலைத்தளத்தில் நிர்மாணித்ததன் காரணமாக வாகன வேலைத்தளமும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்துவதற்கு முடியாத நிலையில் காணப்பட்டன. | | |
| (ஓ) | ரூபா 26,000,000 கிரயமான வீதியை துப்பரவு செய்யும் இயந்திரம் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 450,000 தொகைக்கு மீள்மதிப்பு குழுவின் மூலம் மீள்மதிப்புச் செய்து கைதவிர்ப்புச் செய்வதற்கு சிபாரிசு செய்திருந்தது. இந்த இயந்திரத்தை கைதவிர்ப்புச் செய்வதற்காக சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 450,000 ஆன ஆகக் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டமையும் கைதவிர்ப்புச் செய்வதற்காக சிபாரிசு செய்யப்பட்ட இயந்திரம் பின்னர் ரூபா 2,000,000 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தமையும் அடிப்படையில் மதிப்பீட்டுக் குழு தமது தொழில்சார் பொறுப்பினை முறையாக நிறைவேற்றியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் மீள்மதிப்புச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த இயந்திரமானது மோட்டார் வாகனத்தின் கீழ் மீள்மதிப்புச் செய்யப்பட்டதுடன் அந்த மீள்மதிப்புக் குழு இயந்திரங்களைப் பரீட்சித்த சந்தர்ப்பத்தில் மழையினால் துருப்பிடித்துக் காணப்பட்டதுடன் இன்ஜினும் இந்த வாகனமும் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 450,000 தொகைக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்டது. | சொத்துக்களை சரியாக மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | மேற்கூறிய இயந்தீரத்தினை கொள்வனவு செய்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இயந்திரம் 406 மணித்தியாலங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் மற்றும் 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டிருந்தும் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற | வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரஸ் இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியிருக்காததனால் இந்த இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக பல நிறுவனங்களுக்கு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சொத்துக்களைக் கொள்வனவு செய்தலானது நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கான வேலைத்தளத்தில் காணப்பட்டிருநதும் இந்த இயந்திரத்திற்கு ரூபா 2,000,000 செலவு செய்து திருத்தம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கியமையும் உதிரிப்பாகங்களின் விலைகள் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட இக்காலத்தில் விளைவற்றுக் காணப்பட்ட இயந்திரத்திற்கு 10 பிரஸ் தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தமையும் பிரச்சினைக்குரியதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (க) | ரூபா 158,000,000 பெறுமதியான 02 கொங்கிரீட் பரப்பும் இயந்திரங்கள் 2012 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து எந்த செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது விளைவற்ற ஒரு சொத்தாக மாறியிருந்ததுடன் மற்றைய இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையான 10 ஆண்டுகள் காலத்தில் 15 வீதிகளின் 420 மணித்தியால நிர்மாணிப்பிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததனால் குறைபயன்பாடுள்ள இயந்திரமாக மாறியிருந்தது. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கொங்கிரீட் பரப்பும் இயந்திரத்தின் மூலம் பல செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. | சொத்துக்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கேப் இயந்திரமானது கொள்வனவு செய்த திகதியிலிருந்து எந்த | 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு மட்டத்தில் Curb Wall நிர்மாணிப்பதற்கு ஆலோசனை வழங்கி தற்பொழுது | சொத்துக்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திலும் சேவையில் ஈடுபடுத்தப்படாது திவுலபிடிய பழைய வேலைத்தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தத னால் அந்த இயந்திரம் விளைவற்ற சொத்தாக மாறியிருந்தது. | நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | வேண்டும். |
| (கி) | 2012 ஆம் ஆண்டின் போது எஸ்போல்ட் தயாரிப்பதற்காக தாரினை சூடாக்குவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 27,800,000 பெறுமதியான Decanting இயந்திரத்தினை ஸ்தாபித்து ஆண்டுகள் கடந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை 535,680 Kg தார் மாத்திரம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இயந்திரத்தினை கொள்வனவு செய்யும் போது நிறுவனத்திற்கு உள்ள பொருளாதார ரீதியான நலன் பற்றி கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை . | ஒரு லீற்றர் தாருக்காக Bulk பெற்றுக்கொள்ளும் போது விலை ரூபா 93.45 ஆக இருந்ததுடன் பெரல் மூலம் பெற்றுக்கொள்ளும் போது அப்பணம் ரூபா 106.43 என கணிப்பீடு செய்யப்பட்டது. அக்கணிப்பீட்டின் அடிப்படையில் தோற்றுவித்த Bulk ரீதியாக தாரினை பெற்றுக்கொள்ளுதல் நிறைவேற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். | சொத்துக்களை கொள்வனவு செய்யும் போது பொருளாதார ரீதியான பெறுமதியை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். |

**1.5.6.3 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மேல் மாகாணத்தின் 2010 இன் 06 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட சட்டவிதிகளின் 05 மற்றும் 06 ஆம் பிரிவுகளுக்கு இணங்க நியதிச்சட்டம் அமுலுக்கு வரும் திகதியில் 56 வயதினை மிகைத்த ஊழியருக்கு சட்டவிதிகளின் பட்டோலை II இன் பிரகாரம் ஓய்வூதியத்திற்கு தகமை பெற்றிருப்பதானது ஓய்வு பெறும் வயதில் கிடைத்த திரண்ட சம்பளத்தில் 40 சதவீதம் அளவாக இருக்க வேண்டி இருந்தும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியளவில் 56 வயதினை | கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியத்தின் 14 ஆம் பிரிவின் கீழேயுள்ள நிருவாக சபையினால் எதிர்காலத்தில் ஓய்வூதியத்தினை வழங்கும் போது செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய தவணைப் பணத்தின் எண்ணிக்கையானது பங்களிப்பினை வழங்கிய திகதியிலிருந்து கணிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | ஓய்வூதிய நியதிச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட சட்ட விதிகளின் அட்டவணையில் குறிப்பிட்ட வகையில் தவணைகள் மற்றும் வயதினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியக் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மிகைத்த மாகாண கூட்டுறவு ஓய்வூதிய நிதியத்தின் 211 ஊழியர்களுக்கு 40 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதத்தில் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் ஓய்வூதிய நியதிச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட சட்ட விதிகளின் அட்டவணையில் குறிப்பிட்ட வகையில் தவணைகள் மற்றும் வயதினை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டிய ஓய்வூதிய சதவீதத்தினைவிட அதிக சதவீதத்தில் ஓய்வூதியம் செலுத்தியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 67,145,714 தொகை ஓய்வூதியமாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலைமையானது கூட்டுறவு ஊழியர்களுக்கு தங்களது பங்களிப்பின் அடிப்படையில் ஓய்வூதியத்தினைச் செலுத்துவதற்கு நிதியம் போதியதாக இல்லாமை சிக்கலுக்கு எதிர்காலத்தில் காரணமாக இருக்கும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | | |

### 1.5.7. தலைப்பு – 108 கல்வி, கலாச்சாரமும் கலை நடவடிக்கைகளும், விளையாட்டுக்களும், இளைஞர் விவகாரமும் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகாண கல்வி அமைச்சினால் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பேணப்படுகின்ற கம்பஹா சிறீமாவோ பண்டாரநாயக்கா விளையாட்டு கட்டிடத் தொகுதிக்குரிய காணி மீளாய்வாண்டின் இறுதி வரை அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்பதற்கான இயலுமை இல்லை என கம்பஹா பிரதேச செயலகத்தினால் எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. | காணியை பொறுப்பேற்காது அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

### 1.5.8. தலைப்பு 109 – பிரதம செயலாளர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீட்டினை வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் தாபன விதிக் | vi/100/11-2017-01(iii) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதற்கான 1987 இன் 42 ஆம் இலக்க | தாபன விதிகோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் பிரகாரம் மாதாந்த வீட்டு வாடகையாக ஒரு படியினைச் செலுத்துவதற்கு எதுவித இயலுமையும் இல்லாதிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் வரை தற்காலிகமான கொடுப்பனவாகக் காட்டி மேல் மாகாண சபையின் உயர் பதவிகளை வகிக்கும் 11 உத்தியோகத்தர்களுக்கு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 20,054,032 தொகை மாதாந்த உத்தியோகபூர்வ இல்ல வாடகை செலுத்தப்பட்டிருந்தும் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு மேற்கூறிய 05 ஆண்டுகளுக்குள் ஒரு திட்டமேனும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(5) ஆம் பிரிவின் கீழ் கௌரவ ஆளுனருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் படிகள் செலுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் படியினை செலுத்தும் போது உரிய மாதத்தின் முதலாம் திகதி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள சாதாரண பெற்றோல் மற்றும் டீசல்களின் விலையினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். மேற்கூறிய அறிவுறுத்தல்களை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(IV) ஆம் இலக்க | பிரதம செயலாளர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியினை வழங்கும் போது அது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் பிரகாரம் எரிபொருள் படியினை செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த சுற்றிக்கையில் எரிபொருள் சம்பந்தமாக காட்டப்பட்டுள்ள விடயங்களில் எந்த முறைமையிலும் எரிபொருளின் வகை தொடர்பாக காட்டப்பட்டிருக்கவில்லை | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்க நிருவாக சுற்றிக்கை மற்றும் 2019 மே 31 ஆந் திகதிய 13/2008(v) ஆம் இலக்க திருத்திய அரசாங்க நிருவாக சுற்றிக்கைக்கு இணங்க உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள 52 உத்தியோகத்தர்களுக்கு மாதத்தின் முதலாம் திகதியில் காணப்பட்ட ஒரு லீற்றர் எரிபொருளின் விலையாக சுப்பர் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலின் விலையினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த எரிபொருள் படி கணிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரையான காலத்தில் ரூபா 6,183,569 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (இ) | மாகாண சபை நிதியத்திலிருந்து செயற்படுகின்ற அனைத்து பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2006 பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் பெறுகை நடைமுறையினை அடிப்படையாகக் கொள்ள வேண்டிய போதிலும் மேல் மாகாண சபை கட்டிடத்தின் பாதுகாப்பு சேவை, வெஸ்புரோ பாதுகாப்புச் சேவைக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 48,887,800 ஒப்பந்தத்திற்காக பெறுகைகள் மேற்கொள்ளப்படாது உடன்படிக்கையின் மூலம் பொருளாதார மேம்பாட்டு பணியகத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் விலைகள் சாதாரண சந்தையில் காணப்படுகின்ற விலையினைவிட மிகவும் அதிக விலையினைக் கொண்டிருந்ததுடன் 2022 | அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மாகாண சபை இல்லை என்பதனால் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரை ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிதி விதி மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவை 2006 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் மாதாந்த விலைப்பட்டியலின் பெறுமதி ரூபா 49 இலட்சம் அளவில் இருந்தது. | | |
| (ஈ) | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்டையில் மாத்திரம் மேல் மாகாண சபைக்கும் மேல் மாகாணத்தின் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கும் நாடளாவிய பதவிகளுக்காக 50 உத்தியோகத்தர்கள் சட்டரீதியற்ற முறையாக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் மேற்கூறிய உத்தியோகத்தர்களின் ஒப்பந்த காலத்தை அவ்வாறே நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தற்பொழுது அரசாங்க நிருவாக அமைச்சின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | ஆளணி மற்றும் பயிற்சி பிரிவிற்கு MIS மென்பொருளை ஸ்தாபிப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,300,000 தொகையும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,700,000 தொகையுமாக மொத்தமாக ரூபா 5,000,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய மென்பொருள் முறைமையானது 2023 மே மாதம் வரையும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தரவுகளை உள்ளடக்கும் நடவடிக்கையில் 85 சதவீதமானவை தற்பொழுது முடிவடைந்துள்ளது. | கணனி மென்பொருள் முறைமையை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊச) | மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் மாகாண அமைச்சரவை இல்லாத சந்தர்ப்பத்தில் பிரதம செயலாளரினால் அமைச்சரவை | ஆளுனரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நேரடியாக பிரதம செயலாளரின் கீழுள்ள மாகாண அமைச்சரவை செயலாளர் அலுவலகத்தின் மூலம் என்பதனால் | படிகளுக்காக முறையான அங்கிகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளராக செயற்படுவதற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 15,000 ஆன வகையில் ஒரு படி ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முறையற்ற ரீதியில் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அவ்வாறு முறையற்ற வகையில் செலுத்தப்பட்ட மொத்த படிகள் ரூபா 345,000 ஆகும். | முன்னைய சந்தர்ப்பங்களை விட பிரதம செயலாளரின் பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக அதிக அளவான பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது என தெரிவிக்கிறேன். | |

**1.5.9. தலைப்பு 112 – உள்ளுராட்சி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 49 உள்ளுராட்சி சபைகளின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா 9,209,439,610 ஆகும். | அறவிடப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 மாநகர சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட 13 மிகைக் கட்டணங்கள் தொடர்பாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 26,642,251 ஆகும். | உரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | மிகைக் கட்டணங்கள் சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.10. தலைப்பு 113 – சுகாதார சேவைகள் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண நிதி விதி 41.1(ஆ) மற்றும் 91.1.6 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டணங்களின் அளவினை மாற்றம் செய்வதன் மூலம் வருமானத்தை | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். | மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரிப்பதற்கான இயலுமையினை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமாக அறவீடு செய்யும் கட்டணங்கள் முதலியவற்றை காணப்படுகின்ற பொருளாதார மற்றும் ஏனைய நிலைமைகள் தொடர்பாக கவனித்துப்பார்த்து ஏற்கனவே செய்யப்பட்ட மீளாய்வினை திருத்தம் செய்ய வேண்டிய போதிலும் மருத்துவ சான்றிதழ் வழங்கும் கட்டணம் 2009 யூன் 11 ஆந் திகதியின் பின்னர் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 13 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் மீண்டும் திருத்தம் செய்வதற்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 04 நிதி மோசடிகள் தொடர்பான ரூபா 1,316,457 தொகையும் 02 தீ சேதங்களுக்குரிய ரூபா 455,492 தொகையும் ஏனைய சேதங்களுக்குரிய ரூபா 792,000 தொகையும் 87 வாகன விபத்துக்கள் தொடர்பான ரூபா 26,472,142 தொகையும் அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் இந்த முழு சேதங்களில் ரூபா 29,646,047 பெறுமதியான 49 சேதங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையானவையாக இருந்த போதிலும் அந்த நட்டங்களை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது. | நட்டங்கள் சேதங்களின் கோவைகளை தீர்த்துவைப்பது சம்பந்தமாக தற்பொழுது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 114 – ஆயுர்வேத திணைக்களம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | மீகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் X-Ray பிரிவினை ஸ்தாபிப்பதற்காக ரூபா 5,518,305 செலவு செய்து 2016 ஆம் ஆண்டின் போது மேற்கூறிய கட்டிடம் திறக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,736,500 செலவு செய்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அந்த உபகரணங்களை இயக்குவதற்கு கதிர்வீச்சு நிபுணர்கள் இல்லாததனால் நோயாளர்களும் ஊழியர்களும் சிக்கலுக்கு உள்ளாகியிருந்தனர். அதன் காரணத்தினால் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 1,092,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட Portable X-Ray இயந்திரம் மற்றும் ரூபா 644,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட X-Ray Film Processor இயந்திரம் 2022 ஒக்தோபர் மாதத்தின் போது மினுவாங்கொட ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 14 ஆண்டுகள் அளவான நீண்டகாலம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்ட அறையானது ஏனைய உடைந்த பொருட்களையும் மற்றும் ஏனைய பொருட்களையும் களஞ்சியப்படுத்துவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இயந்திரங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் மூலம் மினுவாங்கொட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது. | வைத்தியசாலையின் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் இல்லாததன் அடிப்படையில் 05 ஆண்டுகள் காலமாக ஆய்வுகூடம் செயற்படாதிருந்ததுடன் அதில் காணப்பட்ட பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் இருந்த 31 வகையான உபகரணங்கள் தொடர்பான 57 ஆய்வுகூட உபகரண விடயங்களும் ஆய்வுகூட பொருட்களும் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டன. மேலும் மேல் மாகாண ஆயுர்வேத ஆரைணயாளரின் மேம/ஆயுர்/கி11/அரச/2 iv ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய அமைச்சு செயலாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் மூலம் இப்பொருட்களை ஆய்வுகூட வசதிகளுடன் மேற்கத்திய வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காட்டப்பட்டிருந்தும் வைத்தியசாலைக்கு ஒரு ஆய்வுகூடத்தின் தேவைப்பாடு அதிகம் உள்ளதனால் உரிய ஆய்வுகூட நிபுணரை தற்காலிகமாக இணைத்துக்கொள்ளல் அல்லது பொருத்தமான ஒரு உத்தியோகத்தரை பயிற்றுவித்து தற்காலிகமாக செயற்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆய்வுகூட நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆய்வுகூடத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.12 தலைப்பு 115- சமூக சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீரிகம ‘‘செத்செவன’’ முதியோர் இல்லத்தின் கஜபா பிரிவில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரை மற்றும் சுவரினை திருத்தம் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 17,456,379 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்கட்டிடத்தின் ஏனைய தேவைப்பாடுகளான கதவு மற்றும் யன்னல் பொருத்தப்பட்டிருக்காததன் காரணமாக 2023 மே மாதம் வரையும் பயன்படுத்த முடியாது காணப்பட்டது. | நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | துரிதமாக பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் மாதம் ரூபா 4,351,357 செலவு செய்து திருத்தம் செய்யப்பட்டிருந்த மீரிகம செத்செவன முதியோர் இல்லத்தின் அத்தியட்சகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்திற்காக தேவையான நீர் வசதிகள் இல்லாமையினால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் உத்தியோகபூர்வ இல்லம் பயன்படுத்த முடியாது காணப்பட்டது. | நீர் சுத்திகரிப்பு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுவதுடன் அது பூர்த்தியடைந்ததன் பின்னர் சிக்கல் தீர்த்து வைக்கப்படும். | துரிதமாக பயன்படுத்துதல் நிலைக்கு கொண்டுவருதல் வேண்டும். |

### 1.5.13 தலைப்பு 116 – நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகொல சான்றுபடுத்திய பாடசாலையில் கணனி பிரிவு, சிற்றூழியர் இல்லம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 11,222,740 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டரங்கு 2023 யூன் மாதம் வரையும் விளைவற்றுக் காணப்பட்டன. | விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் திஸ்ஸ வதிவிடம் பயன்படுத்தும் நிலையில் உள்ளது எனவும் சிற்றூழியர் இல்லம் | துரிதமாக பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | |

**1.5.14 தலைப்பு 126 – கல்வித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு , ஜயவர்த்தனபுர, பிலியந்தல, ஹோமாகம ஆகிய 04 வலய கல்வி அலுவலகங்களில் 42 பாடசாலைகளும் கம்பஹா மாவட்டத்தில் களணி, மினுவாங்கொட, கம்பஹா, நீர்கொழும்பு ஆகிய 04 வலயக் கல்வி அலுவலகங்களில் 44 பாடசாலைகளும் களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை, மத்துகம, ஹெரரண ஆகிய 03 வலயக் கல்வி அலுவலகங்களில் 45 பாடசாலைகளும் போதியளவு மாணவர்கள் இல்லாமையின் காரணமாக மூடப்பட்டிருந்தன. அவற்றிற்கு மத்தியில் களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை மற்றும் மத்துதகம வலயத்தில் 02 பாடசாலைகளும் கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட வலயத்தில் 02 பாடசாலைகளும் 2022 ஆம் ஆண்டின் போது மூடப்பட்டிருந்தன. | பாடசாலைகளை மூடுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கையுடன் இருந்தமையாகும். ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கையுடன் பாடசாலைகளை செயற்படுத்தும் பாதகமான நிலைமையை சமநிலைப்படுத்துவதற்காக வும் மாணவர்களுக்கு மிகவும் வினைத்திறனான பாடசாலை முறைமையில் கற்கும் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் இவ்வாறு பாடசாலைகளை மூடவேண்டி ஏற்பட்டது. | பாடசாலைகளை மூடுவதனைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கிராமிய பாடசாலைகளை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு வலயத்தில் 16 பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குரிய நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாகவும் மஹாபோதி மகா வித்தியாலய ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை கைவிட்டதனாலும் பிரஸ்படீரியன் மகளிர் | ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொள்கையில் 2020 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபை நிதி ஏற்பாட்டில் நிர்மாணிப்பதற்கான மூலதனச் செலவு நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் மட்டுப்படுத்தப்பட்டதனால் இக்கட்டிடத்தினை முழுமையாக கட்டி | முன்னுரிமைக்கு இணங்க அரைசவாசி பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களை பூர்த்தியான கட்டிடமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலை வழக்கு தாக்கல் செய்ததன் காரணமாகவும் 18 பாடசாலைக் கட்டிடங்கள் அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களாக மாறியிருந்ததுடன் சிறீஜயவர்த்தனபுர வலயத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 492,600,000 தொகையான 17 பாடசாலைகளுக்கான நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் ஹோமாகம வலயத்தில் 2015 ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்ட 14 பாடசாலைகளில் 13 பாடசாலைகளுக்காக நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக அக்கட்டிடம் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுக் காணப்பட்டன. | பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. | |
| (இ) | கம்பஹா மாவட்டத்தின் கம்பஹா வலயத்தில் நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்படாமையின் காரணமாக 6 பாடசாலைகளிலும் நிதி எற்பாடு கிடைக்காமை மற்றும் நிதி ஏற்பாடு கிடைப்பதற்கு தாமதித்தமையின் காரணமாக 07 பாடசாலைகளிலும் கட்டிடங்கள் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுக் காணப்பட்டதுடன் மினுவாங்கொட வலயத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிகப்பட்ட 07 பாடசாலைகளுக்கு உரிய நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுக் காணப்பட்டன. மேலும் நீர்கொழும்பு வலயத்தில் நிதி ஏற்பாடு இல்லாமையின் அடிப்படையில் 06 பாடசாலைகளின் கட்டிடங்கள் அரைவாசி | ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொள்கையில் 2020 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபை நிதி ஏற்பாடுகளிலிருந்து நிர்மாணங்களுக்கான மூலதனச் செலவு நிதி எற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் மட்டுப்படுத்தப்பட்டதனால் இக்கட்டிடங்களை பூரணமாக கட்டி பூர்த்திசெய்வதற்கு முடியாதுள்ளது. பல கட்டிடங்கள் கட்டம் கட்டமாக பூர்த்திசெய்து பயன்பாட்டிற்கு எடுத்துகொள்ளப்பட்டதுடன் கிடைத்த நிதியின் அளவுக்கு இணங்க கட்டம் கட்டமாக இக்கட்டிடத்தினை பயன்படுத்துவதற்கு எடுக்கும் நிலைக்கு மாற்றுவதற்கு பிராந்திய பொறியிலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்னுரிமைக்கு இணங்க அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களை பூர்த்தியான கட்டிடங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்திசெய்யப்பட்டுக் காணப்பட்டதுடன் அவற்றின் பூர்த்தியாக்கல் சதவீதமானது 18 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடையே காணப்பட்டன. | | |
| (ஈ) | களுத்துறை மாவட்டத்தில் ஹொரண வலயத்திலுள்ள 29 பாடசாலைகளின் அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களுக்கு மத்தியில் நிர்மாண வேலைகளின் செயல் முன்னேற்றம் 10 சதவீதத்திற்கும் குறைவான கட்டிடங்கள் 06 ஆகக் காணப்பட்டதுடன் மதுகம வலயத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 18 கட்டிடங்களின் பூர்த்தியாக்கல் சதவீதமானது 45 சதவீதத்திற்கும் 95 தசவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்கையில் 2020 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபை நிதி ஏற்பாடுகளில் நிர்மாணங்களுக்கான மூலதனச் செலவு நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் மட்டுப்படுத்தப்பட்டதனால் இக்கட்டிடங்களை முழுமையாக கட்டி பூர்த்திசெய்வதற்கு முடியாதுள்ளது. | முன்னுரிமைக்கு இணங்க அரைவாசி பூர்த்திசெய்த கட்டிடங்களை பூர்த்திசெய்த கட்டிடங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கொழும்பு, களுத்துறை, கம்பஹா, ஆகிய மாவட்டங்களில் மேல் மாகாண சபையினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளின் மாணவர்கள் தோற்றுகின்ற ஐந்தாம் தரத்தின் புலரமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சை மற்றும் க.பொ.த (உ.தரம்) பரீட்சை ஆகிய பரீட்சைகளின் போது சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கையை ஆண்டுக்கு ஆண்டு படிப்படியாக குறைவடையச்செய்வதற்கு முறைப்படியாக நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள முறைமையில் 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒவ்வொரு பரீட்சைகளின் போது | | |

| | | | |
|---|---|---|---|
| | மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. | | |
| (i) | மேல் மாகாணத்தில் ஐந்தாம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 75,223ஆன மொத்த மாணவர் எண்ணிக்கையில் 11,792 மாணவர்கள் 80 புள்ளிகளுக்கு குறைவாக பெற்றிருந்தமையின் அடிப்படையில் சித்தியடைந்திருக்கவில்லை. அது சதவீதமாக 15.7 சதவீதமாகும். | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன். | மாணவர்களின் சித்தியடைதல் மட்டத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மேல் மாகாணத்தில் முதலாவது தடவையாக க.பொ.த(சா.தர) பரீட்சைக்கு தோற்றிய 51,423 ஆன மொத்த மாணவர் எண்ணிக்கையில் 16,195 மாணவர்கள் க.பொ.த (உ.தர) கல்வியை தொடர்வதற்கு தகமை பெற்றிருக்கவில்லை. அது சதவீதமாக 31.5 ஆகும். | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன். | க.பொ.த (சா/∴.தர) பரீட்சைளயில் சித்தியடையும் சதவீதத்தினை அதிகரிக்க செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மேல் மாகாணத்தில் முதலாவது தடவையாக க.பொ.த (உ.தர) பரீட்சைக்கு தோற்றிய 23,482 ஆன மொத்த மாணவர் எண்ணிக்கையில் 3,521 மாணவர்கள் 03 தொடக்க பாடங்களில் சித்தியடைந்திருக்கவில்லை. அது சதவீதமாக 15 சதவீதமாகும். | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன். | க.பொ.த (உ/∴.தர) பரீட்சைளயில் சித்தியடையும் சதவீதத்தினை அதிகரிக்க செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு, ஜயவர்த்தனபுர, பிலியந்தல, மற்றும் ஹோமாகம ஆகிய 04 வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய 89 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 16 இல்லங்களும், 35 ஆசிரியர் இல்லங்களில் 08 இல்லங்களும் கம்பஹா மாவட்டத்தில் களணி, மினுவாங்கொ, கம்பஹா, நீர்கொழும்பு ஆகிய 04 வலயக் கல்வி அலுவலகங்களைச் சார்ந்த 13 அதிர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 06 இல்லங்களும், 34 ஆசிரியர் இல்லங்களில் 08 இல்லங்களும் களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை, மத்துகம, ஹொரண ஆகிய 03 வலயக்கல்வி அலுவலகங்களைச் சார்ந்த 27 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 08 இல்லங்களும் 163 ஆசிரியர் இல்லங்களில் 30 இல்லங்களும் உத்தியோகபூர்வ இல்லங்களாக பயன்படுத்தப்படாமையின் காரணமாக உத்தியோகபூர்வ இல்ல வாடகையாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பிராந்திய பொறியியலாளரினால் உடைத்து அகற்றுமாறு சிபாரிசு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தாத நிலையில் உள்ளன. சில உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்துவதற்காக வேண்டப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளன. | உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்தக்கூடிய மட்டத்திற்கு மேம்படுத்தி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கொழும்பு மாவட்டத்தின் 04 வலயக் கல்வி அலுவலகங்களைச் சார்ந்த 89 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 06 இல்லங்களும், 35 ஆசிரியர் இல்லங்களில் 02 இல்லங்களும் கம்பஹா மாவட்டத்தில் 04 வலயக் கல்வி அலுவலகங்களைச் சார்ந்த 13 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 01 இல்லமும், 34 ஆசிரியர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 02 | பாடசாலைக் கட்டிடத்தினை உடைத்து அகற்றி புதிய கட்டிடத்தினை தற்காலிகமாக வகுப்பறைக்காக ஈடுபடுத்துதல், பாடசாலை இடவசதி போதாமையால் செயற்பாட்டு அறையாக ஈடுபடுத்துதல், பாடசாலையில் பாடசாலைக் கட்டிடமாக நிரந்தரமாக ஈடுபடுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்காக உத்தியோகபூர்வ இல்லங்கள் | அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களையும் ஆசிரியர் இல்லங்களையும் உத்தியோகபூர்வ இல்லங்களாகப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லங்களும் களுத்துறை மாவட்டத்தில் 03 வலயக் கல்வி அலுவலகங்களைச் சார்ந்த 27 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 05 இல்லங்களும் 163 ஆசிரியர் இல்லங்களில் 35 இல்லங்களும் உத்தியோகபூர்வ இல்லங்களாகப் பயன்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளாது மேற்கூறிய இல்லங்களுக்குரிய பாடசாலையில் ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததனால் 51 உத்தியோகபூர்வ இல்லங்கள் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படாததன் அடிப்படையில் உரிய பாடசாலையில் சேவையாற்றுகின்ற அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு அருகாமையில் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்து வசதியாக கடமைகளை மேற்கொள்வதற்கு இருந்த வாய்ப்புக்களும் மாகாண சபைக்கு ஏதாவது வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வாய்ப்புக்களும் இழக்கப்பட்டிருந்தன. | ஈடுபடுத்தப்படுகின்றன. | |
| (ஏ) | மேல் மாகாணத்திற்குரிய 129 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 21 இல்லங்களும் 232 ஆசிரியர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 74 இல்லங்களும் துரிதமாக திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அந்த திருத்த வேலைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டிய உத்தியோகபூர்வ இல்லங்களை அவ்வாறு செய்வதற்கு காரணமாக மதிப்பீடு கோரப்பட்டிருந்த போதிலும் நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. | துரிதமாக உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சாதாரண கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் (GEMP) கீழ் கிரீன்பாத் பயிற்சி நிலையத்திற்காக 2021 ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கிய ரூபா 10,490,862 பெறுமதியான பொருட்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | தற்பொழுது பாடசாலை கண்காட்சி மற்றும் இரண்டு செயலமர்வுகளின் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த நிலையத்தில் இடம்பெற்றன. | ரூபா 10,490,862 தொகையான நிதியற்ற சொத்துக்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,215,880,246 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 11,649,854,163 ஆகும். அதற்கிணங்க நிதியத்தின் நிதி விளைவுகளில் ரூபா 3,566,026,083 முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த முன்னேற்றத்திற்கு வரி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 3,072,607,818 ஆல் அதிகரித்தல் அரசாங்கத்தின் மீண்டுவரும் மானிய பெறுவனவு ரூபா 13,716,562,590 ஆல் அதிகரித்தல் காரணமாக இருந்தது.

## 3. ஆளணி நிருவாகம்

### 3.1 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனையவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மேல் மாகாண அரசாங்க சேவை நடைமுறை மற்றும் சட்ட விதிக்கோவையின் XXIII ஆம் அத்தியாயத்தின் 192(i),(iii),(v) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் ஏதாவது ஒரு சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள காலப்பகுதியில் சேவை நிலையங்களில் காணப்படுகின்ற சட்டரீதியான மேலதிக நிதி பிரதிபலன்களும் சலுகைகளும் மாகாண சபை அரசாங்க சேவையின் உத்தியோகத்தர் ஒரே சேவை நிலையத்தில் நீண்டகாலமாக தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் மூலம் அல்லது ஒரே கடமையினை நீண்டகாலமாக தொடர்ச்சியாக நிறைவேற்றுவதன் மூலம் ஏற்படக்கூடிய ஒழுங்கீனமான செயற்பாடுகளை தவிர்ப்பதற்காக வருடாந்த இடமாற்ற கொள்கை மற்றும் நடைமுறை | 2000 இன் 07 ஆம் இலக்க மாகாண சபை செயலாளர் அலுவலக ஊழியர் நியதிச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரே சேவை நிலையத்தில் நிண்டகாலம் தொடர்ச்சியாக சேவையாற்றுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டு இடமாற்றம் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மேல் மாகாண சபை செயலாளர் அலுவலகத்தின் 18 உத்தியோகத்தர்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கும் 30 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக இடமாற்றமின்றி ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றி வருகின்றனர். | | |

**3.2 மாகாண சபை நியதிச்சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மேல் மாகாண அபிவிருத்திச் சபைக்காக 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய DMS/WP/0507 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடித்தத்தின் மூலம் ஆளணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆளணியினரை சேர்த்துக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பதில் கடமைபார்த்தல், ஒப்பந்த அடிப்படை மற்றும் தற்காலிக அடிப்படையின் கீழ் அனைத்து உத்தியோகத்தர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | அரசாங்கத்தின் கொள்கையாக அனைத்து ஆட்சேர்ப்புக்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளத னால் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. | சபையின் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நிரந்த ஆளணியினர் காணப்படுதல் வேண்டும். |
| (ஆ) மேல் மாகாணத்தின் வீதிப் பயணிகள் அதிகாரசபையின் கொழும்பு -01 பிராந்திய அலுவலகத்தின் கீழ் உள்ள பஸ்தியன் மாவத்தை பஸ்தரிப்பிடம் 2009 யூன் 20 ஆந் திகதியிலிருந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழவிற்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டு வரை பஸ் தரிப்பிடத்திலிருந்து அதிகார சபைக்கு எதுவித வருமானமும் கிடைக்காதிருந்தும் அதில் சேவையாற்றிய ஆளணியின் 30 நபர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளுமாக ரூபா 31,273,010 தொகை அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் | அதிகார சபையின் மூலம் சம்பளமும் படியுமாக செலுத்தப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்யுமாறு 2022 நவம்பர் 30 ஆந் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழவிடம் வேண்டுதல் சமர்பிக்கப்பட்டு அதற்கு பதில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது டன் மேலதிக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆளணியினரின் சம்பளங்களையும் படிகளையும் மீளளிப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த ஆளணியினருக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 அந் திகதி வரை சம்பளமும் படியுமாக செலுத்தப்பட்டிருந்த பணம் ரூபா 314,297,289 ஆகும். | | |
| (இ) | பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக அங்கீகரித்த ஆளணியினருக்கு மேலதிகமாக அதிகாரசபையினால் அமைய அடிப்படையில் 362 ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் 153 ஊழியர்களுமாக அதிகாரசபையின் செயற்பாடுகளுக்காக அங்கிகரித்த ஆளனிணியினரை மிகைத்து 515 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மனிதவலுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்காக எங்களினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை எடுத்த முயற்சிகள் அனைத்தும் பயனளிக்கவில்லை. | அரச கணக்குகள் குழுவின் பணிப்புரை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.3 பாடசாலை ஆளணியினர்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய 03 மாவட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளின் கல்வி நிருவாக சேவையின் 20 அதிபர்கள், அதிபர் சேவையின் 262 அதிபர்கள், 256 பிரதி அதிபர்கள், 47 உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சேவையில் 1,893 ஊத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | இந்த வெற்றிடங்கள் சம்பந்தமாக பிரதிப் பிரதம செயலாளருக்கு (ஆளணி மற்றும் பயிற்சி) தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படும் வரை பாடசாலை முறைமையை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சுகாதார ஆளணியினர்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பதுரெலிய பிராந்திய வைத்தியசாலையின் நிலையப்பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர் (MOIC) பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் பிரதான தாதி உத்தியோகத்தரினை | 2023 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றத்தின் போது சேவைக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு இடமாற்றத்தினை | சுற்றிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்தை பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கி 13 தாதி உத்தியோகத்தர்கள் 13 ஆண்டுகளிலிருந்து 27 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாகவும், ஒரு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் 16 ஆண்டுகள் காலமாகவும் இரண்டு கண்காணிப்பாளர்கள் 10-15 ஆண்டுகள் காலமாகவும் இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது ஒரே வைத்தியசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்றி வருகின்றனர். | அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உட்படுத்தப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 திட்டமிடல்**

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனமும் தமது நிறுவனத்திற்காக ஒவ்வொரு ஆண்டிற்காகவும் அங்கீகரித்த பாதீட்டினை அமுல்ப்படுத்துவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்க வேண்டியதுடன் அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறை ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதம செயலாளர் அலுவலகத்திலுள்ள பிரிவினரால் தனித்தனியாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதனனை ஒரு அலகாக தயாரிப்பதற்கு காலம் எடுப்பதனால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வழங்க முடியாது போகலாம். | சுற்றிக்கை ஏற்படாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |